இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 10 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 03 – வியாழக்கிழமை 20 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 10 : Thiruvalluvar Year - 2057 - Aavani 03 - Thursday 20 August 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

## அப்பட்டமான மனித உரிமை மீறல்! கர்நாடகாவில்

# 3 தமிழர்கள் சுட்டுக் கொலை: நீதி விசாரணை நடத்த வேண்டும்!

## சட்டப்பேரவையில் தி.மு.க. வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 20 - “கர்நாடகாவில் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இச்சம்பவம் குறித்து அரசு நீதி விசாரணை நடத்த வேண்டும்” என்று சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் மனோஜ் பாண்டியன் வலியுறுத்தினார்.**

கர்நாடக வனத்துறையால் தமிழர்கள் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 18) கொண்டுவரப்பட்டது.

கர்நாடகாவின் அன்னூர் அருகே தமிழர்கள் மூன்று பேர் அம்மாநில அரசால் கடந்த ஆகஸ்ட் 15ஆம் தேதி சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம், சட்டமன்ற பேரவை விதி 55ன் கீழ் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானமாக முன்மொழியப்படுவதாக பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்தார்.

**மனோஜ் பாண்டியன் பேச்சு!**

சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், “கர்நாடகா வனப் பகுதியில் மூன்று தமிழர்கள் கால்நடைகளை தேடிச் சென்ற போது அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தமிழர்கள் எங்கே பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக முதன் முதலில் குரல் கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். கர்நாடகாவில் தற்போது தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் முற்றிலும் மனித உரிமை மீறலாகும். இது “Fake என்கவுண்டர்”.

**கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்!**

உயிரிழந்த தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். இதுத்தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு போதுமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இந்த Fake என்கவுண்டருக்கு நீதி விசாரணை தேவை. இது சாதாரணமான பிரச்சனை அல்ல. தமிழர்களுக்கான பிரச்சனை. இந்த விவகாரத்தில் தெளிவான நீதி விசாரணை நடைபெற வேண்டும். இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசு, கர்நாடகாவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு இந்த விவகாரத்தை தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு கொண்டு செல்லலாம் என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகளில் தெரிவித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசு இந்த விவகாரத்தில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? இந்த விவகாரம் தொடர்பாக கர்நாடக அரசிற்கு தமிழ்நாடு அரசு ஏதேனும் கடிதங்களை அனுப்பியுள்ளதா? தமிழர்களை சுட்டுக் கொன்றவர்கள் மீது குற்றவழக்கு பதிவு செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?” என்று கேள்வி எழுப்பினார்.

**இழப்பீடு வழங்க வேண்டும்!**

கர்நாடகாவில் 3 அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும். தி.மு.க. கர்நாடக வனத்துறையினர் மீது கொலை வழக்குப்பதிவு செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான இழப்பீடு வழங்க வேண்டும் கர்நாடகாவில் 3 தமிழர்கள் கொலை செய்யப்பட்டதை தமிழ்நாடு அரசு கண்டிக்க வேண்டும். உரிய விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை கொடுக்க கர்நாடக அரசுக்கு தமிழ்நாடு அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

**கிராம மக்கள் சந்தேகம்!**

கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், வனத்துறையினர் போலீசாரிடம் ஒப்படைத்த தடயங்களில் சந்தேகம் உள்ளதாக கிராம மக்கள் புகார் கூறியுள்ளனர்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் மாவட்டம் ஹன்னூர் தாலுகா உள்ள காவேரி வன விலங்கு சரணாலயத்தில் கடந்த சனிக்கிழமை அதிகாலை அந்த கிராமத்தைச் சேர்ந்த மூன்று பேரை வனத் துறையினர் சுட்டுக்கொன்றனர். இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நடத்தும் போலீசாரிடம் வனத்துறை சார்பில் தடயங்கள் வழங்கப்பட்டன. இந்த தடயங்களில், கொல்லப்பட்டவர்கள் பயன்படுத்தியதாக சில பொருட்களை போலீசாரிடம் வனத்துறை ஒப்படைத்துள்ளது.

காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட துப்பாக்கி, காலணி, கத்தி உள்ளிட்ட பொருட்கள் புதிதாக இருப்பதால் கிராம மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

ஒப்படைக்கப்பட்ட பொருட்களில் ஸ்டிக்கர் கூட பிரிக்கப்படாத காலணி, புதிய பை இருப்பதால் சந்தேகம் எழுந்துள்ளது. வனத்துறையினர் திட்டமிட்டு கொலை செய்ததாக கூறப்படும் நிலையில் சந்தேகம் மேலோங்கியுள்ளது.

---

## பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்!

# பயிர்க்கடன் தள்ளுபடியில் ஏமாற்றிய த.வெ.க. அரசு!

## ‘மாநில அளவில் போராட்டம் வெடிக்கும்’ – விவசாயிகள் எச்சரிக்கை!

*தஞ்சை, ஆக. 20 - பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக முதலமைச்சரின் அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.*

*தேர்தல் அறிக்கையில் முழு பயிர்க்கடன் தள்ளுபடி என அறிவித்துவிட்டு த.வெ.க. அரசு தற்போது ஏமாற்று வேலையில் ஈடுபடுவதாக தெரிவித்த விவசாயிகள், பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாவிட்டால் மாநிலம் தழுவிய போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.*

*பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, லால்குடியில் விவசாயிகள் திருவோடு ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*த.வெ.க. தேர்தல் வாக்குறுதியின்படி விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், நெல் குவிண்டாலுக்கு 3 ஆயிரத்து 500, கரும்பு டன்னுக்கு 4 ஆயிரத்து 500 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி, தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாய சங்க மாநில தலைவர் பூரா.விசுவநாதன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.*

*இதில், நூற்றுக்கணக்கான விவசாயிகள் பங்கேற்று, வாடிய பயிர்களை கைகளில் ஏந்திய படி லால்குடி சந்தை பேட்டையில் இருந்து பேரணியாக சென்று, ரவுண்டானா பகுதியில் திருவோடு ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக முதலமைச்சரின் அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.*

*நாய்க்கு பிஸ்கெட் போடுவதுபோல் விவசாயிகளை முதலமைச்சர் அவமதிப்பதாக வேதனையை வெளிப்படுத்தியுள்ளனர். தேர்தல் அறிக்கையில் முழு பயிர்க்கடன் தள்ளுபடி என அறிவித்துவிட்டு த.வெ.க. அரசு தற்போது ஏமாற்று வேலையில் ஈடுபடுவதாகவும் கண்டித்துள்ளனர்.*

---

## தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மீண்டும் கடைசி இடம்!

# குடியரசு துணைத் தலைவர் பங்கேற்ற நிகழ்வில் முதலில் வந்தே மாதரம்!

## பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலும் தொடரும் அவலம்!

*தஞ்சை, ஆக. 20 - தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்றார்.*

*இந்நிகழ்ச்சியில் முதலில் வந்தே மாதரம், அடுத்ததாக தேசிய கீதம் பாடப்பட்ட நிலையில், கடைசியாக தமிழ்த் தாய் வாழ்த்து ஒலித்தது.*

*தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலும் இந்த அவலம் அறங்கேறியுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட வேண்டும் என்ற அரசின் உத்தரவை பல்கலைக் கழகங்கள் மீறியுள்ளன.*

*தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டதற்கு த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா? என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

---

## விலைவாசி உயர்வு, குறுவை சாகுபடி நாசம், ஆணவப் படுகொலைகள்!

# அலங்கோலங்களே த.வெ.க.வின் 100 நாள் ஆட்சியின் சாதனைகள்!

## பொதுமக்கள் சரமாரியாக குற்றம் சாட்டியுள்ளனர்!

*சென்னை, ஆக. 20 - த.வெ.க. ஆட்சியில் அரிசி விலை கிடுகிடுவென ஏறிவிட்டதாக பொதுமக்கள் ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.*

*த.வெ.க.வினரின் தொடர் குற்றச் செயல்கள், பெரும்பாலான நேரங்களில் மின்சாரம் இருப்பதில்லை, மாநிலம் முழுவதும் 8 ஆணவப் படுகொலைகள் நடந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.*

*தொழில் முதலீடுகள் 6வது இடத்திலிருந்து 17வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.*

*கொடுத்த வாக்குறுதிப்படி பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யவில்லை. காவிரி பாசனம் இல்லாமல் குறுவை சாகுபடி நாசமாகி விட்டதாக விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். 7 காவல் மரணங்கள் நடந்துள்ளது பற்றி த.வெ.க. அரசு வாய் திறக்கவில்லை.*

*மின் கட்டணம் திடீரென கடுமையாக உயர்ந்துள்ளது. இப்போது, சொல்லுங்கள் முதல்வரே இதுதான் இந்த யுகத்திற்கான புரட்சியா? என்று பொதுமக்கள் சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளனர்.*

---

## முதலமைச்சர் அலுவலக இடமாற்றம்:

# ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பல்வேறு முறைகேடுகள்!


## ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேடு குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக. 20 - தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் அலுவலகக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் செயல்முறையில், பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.**

முதலமைச்சர் அலுவலகக் கட்டுமானத்திற்கான டெண்டர் செயல்முறை தொடர்பாக விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பல்வேறு கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியுள்ளது. கட்டாய ஆன்லைன் டெண்டர் விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், டெண்டர்கள் பொதுவெளியில் வெளியிடப்படுவதற்கு முன்பே இடிப்புப் பணிகள் தொடங்கிவிட்டன என்றும் டைம்ஸ் ஆஃப் இந்தியா தெரிவித்துள்ளது.

அரசு கொள்முதலில் வெளிப்படைத்தன்மை என்பது புதிய அரசாலும், முதலமைச்சர் விஜய் அவர்களாலும் தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாக முன்னிலைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களில் ஒன்றாகும் என்பதால், இந்தக் குற்றச்சாட்டுகள் குறிப்பாகக் கவனிக்கத்தக்கவையாக உள்ளன.

தனது முதல் பட்ஜெட்டில், த.வெ.க. அரசாங்கம் வெளிப்படையான டெண்டர் முறை மூலம் பொதுக் கொள்முதலில் சீர்திருத்தங்களை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை, கூட்டுச் சதியை முடிவுக்குக் கொண்டுவரவும், வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தவும், அரசாங்க ஒப்பந்தங்கள் ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் குழுவிற்கு மட்டும் பயனளிக்காமல் இருப்பதை உறுதி செய்யவும் நோக்கமாகக் கொண்டது என்று நிதி அமைச்சர் என். மேரி வில்சன் கூறியிருந்தார்.



டெண்டர் குறித்து முடிவு ஆவதற்கு முன்பே முதல்வர் அறைக்கான சீரமைப்புப் பணிகள் தொடங்கிய காட்சி.

மேலும், துறைசார் கொள்முதல்கள் மற்றும் பொது டெண்டர்கள் முழுமையாக வெளிப்படையானதாக மாற்றப்பட்டு, கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது.

அந்தப் பின்னணியில், முதலமைச்சரின் புதிய அலுவலகத்திற்கான டெண்டர் செயல்முறை குறித்து டைம்ஸ் ஆஃப் இந்தியா அறிக்கை கேள்விகளை எழுப்பியுள்ளது.

அந்த அறிக்கையின்படி, பொதுப்பணித் துறையின் கட்டிடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) பிரிவு, செப்டம்பர் 1ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைச் அளிக்குமாறு ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுத்து, ஆகஸ்ட் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகளை வெளியிட்டது. இருப்பினும், இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோருதல் கட்டாயமாக்கப்பட்டிருந்தபோதிலும், அந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஆரம்பத்தில் அரசின் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவேற்றப்படவில்லை.

அறிக்கையின்படி, பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் இந்த விவகாரத்தை எழுப்பிய பின்னரே டெண்டர்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 17, திங்கட்கிழமை காலை சுமார் 9.30 மணியளவில், டெண்டர்கள் ஏன் பதிவேற்றப்படவில்லை என்று கேட்டு பொதுப்பணித்துறை செயலாளர் ஆர். செல்வராஜை தொடர்பு கொண்ட போது, அவை இணையத்தில் பதிவேற்றப்படும் என்று செல்வராஜ் கூறியதாகவும், அதைத் தொடர்ந்து காலை சுமார் 10 மணியளவில் அவை இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தாமதம் மிகவும் குறிப்பிடத்தக்கது, ஏனெனில், டைம்ஸ் ஆஃப் இந்தியா செய்திப்படி, பொதுப் பணித் துறை ஆகஸ்ட் 12 முதல் ஆகஸ்ட் 17 வரை 135 பிற டெண்டர்களை இணையத்தில் பதிவேற்றியிருந்த நிலையில், முதலமைச்சர் அலுவலகம் (CMO) தொடர்பான மூன்று டெண்டர்கள், இந்தப் பிரச்சினையை எழுப்பும் வரை பதிவேற்றப்படவில்லை.

திட்டச் செலவு குறித்த தகவலில் உள்ள முரண்பாடுகளையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது. டெண்டர் அறிவிப்பின் அச்சுப் பதிப்பில் ரூ. 5.54 கோடி மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், இந்தச் செலவு விவரங்கள் இணையவழி டெண்டர் ஆவணங்களில் இடம்பெறவில்லை. இணையதளத்தில் தொடர்புடைய இடத்தில் “பொருந்தாது” (NA) எனக் குறிக்கப்பட்டிருந்தது. டி.வி.கே. அரசு பதவியேற்று 100 நாட்களை நிறைவு செய்துள்ள நிலையில் இந்த சர்ச்சை எழுந்துள்ளது.

இவ்வாறு டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

த.வெ.க. அரசின் சாதனைகளில் இதுவும் ஒன்றுதானோ!